**இலங்கை போக்குவரத்து சபை - 2024**

---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

இலங்கை போக்குவரத்து சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலினை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக பாதகமான அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்ற

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா

என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புதககங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா:

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16) - ஆதனம், பொறி மற்றும் உபகணரங்கள் நியமத்தின் 39 ஆம் பந்திக்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீண்டும் பெறுமதியிடும் போதான மிகையை ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் காட்டுதல் வேண்டும். மீளாய்வாண்டின் போது சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் 08 | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெறுமதி சரியானதுடன் 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இப்பெறுமதியை விபரமான வருமானத்தில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீளப் பெறுமதியிடும் போதான மீள்மதிப்பு மிகைப் பெறுமதியை வருமான கூற்றில் ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களை மீளப் பெறுமதியிடும் போது ரூபா 1,576,346,000 மிகையானது மீள்மதிப்பு ஒதுக்கத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி விபரமான வருமானக் கூற்றில் ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் வெளிப்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மொத்த விபரமான வருமானம் அப்பெறுமதியால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே அந்த நியமத்தின் 36 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை மீள்மதிப்பு செய்வதாயின் அந்த ஆதனம், பொறி உபகரண தொகுதி மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் சபை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் காணி மற்றும் கட்டிடங்களில் ஒரு பகுதியினை மாத்திரம் மீள்மதிப்புச் செய்திருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 (LKAS 07) - காசுப் பாய்ச்சல் கூற்று நியமத்தின் 20 ஆம் பந்திக்கு இணங்க காசுப் பாய்ச்சல் அல்லாத வருமானங்கள் தேறிய இலாபத்திற்கு செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 7,298,811 தொகையான இருப்பு செம்மையாக்கல கணக்கு மீதி மற்றும் ரூபா 5,869,576 தொகையான எரிபொருள் இருப்பு மிகை என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான தேறிய இலாபத்திலிருந்து கழித்து மீண்டும் இப்பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய இலாபத்திற்கு | இப்பெறுமதிகள் காசு உருவாக்கமற்ற விடயமானதுடன் இலாப செம்மையாக்கல் மாத்திரம் மேற்கொள்ளப்படும். கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இச்செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்களை காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக செம்மையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்க்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 (LKAS 07) - காசுப் பாய்ச்சல் கூற்று நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்றானது வரி அறவீட்டிற்கு முன்னைய தேறிய இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வரிக்கு பின்னைய இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டில் திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட வரிப் பெறுமதி ரூபா 329,680,000 இனை காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்க முடியாதிருந்தது. | அதனை தனியாக காட்டுவதற்கு தவறியுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது அதனை சரியான முறைமையில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 (LKAS 10) - அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் உருவாகியுள்ள சம்பவங்கள் நியமத்திற்கு இணங்க அறிக்கையிடுகின்ற திகதிக்கும் நிதிக்கூற்றுக்களை வெளியிடுகின்ற திகதிக்குமிடையே இடம்பெறுகின்ற அறிக்கையிடும் திகதியில் சான்றுகளை வழங்குகின்ற சம்பவங்கள் நிதிக்கூற்றுக்களில் செம்மையாகக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை சபைக்கு எதிராக வீதி விபத்துக்காக தொடுக்கப்பட்டிருந்த 2004/எம் ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பு பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் அறிக்கையிடுகின்ற திகதிக்கு பின்னைய காலப்பகுதியின் போது வெளியிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 6,951,216 தொகையினை பாதிக்கப்பட்ட | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அனைத்து சட்டப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நபருக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க இந்த மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சபையின் நட்டம் அப்பெறுமதியால் குறைவடைந்திருந்தது. | | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16) இன் 07 ஆம் பந்திக்கு இணங்க ஏதாவது ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரண கிரயத்தினை ஒரு சொத்தாக அடையாளம் காண்பதாயின் அச்சொத்தின் எதிர்கால பொருளாதார நலன் நிறுவனத்திற்கு உருவாகும் இயலுமை காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 1,367,754,792 தொகையான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததாக முழுமையாக உடைந்த பஸ்கள் மற்றும் ரூபா 1,041,195 தொகையான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததாக உடைந்த ஏனைய வாகனங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரண கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிலயைான சொத்துக்கள் தொடர்பாக ஆய்வு செய்து ஒரு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு வெளி நிறுவனத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பணிப்பார் சபையினால் வழங்கப்படுகின்ற தீர்மானத்திற்கு இணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | முழுமையாக உடைந்த பெறுமதி ஆதனம், பொறி மற்றும் உபகரண கணக்கிலிருந்து அகற்றுதல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16) - ஆதனம், பொறி மற்றும் உபகரண நியமத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது | இந்த அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனியை கலைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு இறுதி அறிக்கை இலங்கை | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பொறுப்பேற்கப்பட்டிருந்த சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களின் பிரதிபலன் நிறுவனத்திற்கு உருவாகும் இயலுமை மற்றும் கிரயத்தை நம்பகரமாக அளவீடு செய்யக்கூடியதாக இருத்தல் என்ற வரையறையின் அடிப்படையில் சொத்துக்களாக அடையாளங்காணக்கூடியதாக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது அதிவேகப் பாதை போக்குவரத்து (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான 20 பஸ்களை ரூபா 109.4 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு பொறுப்பேற்று அவற்றிற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 63.45 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் இன்னும் செலுத்த வேண்டிய ரூபா 45.95 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய 20 பஸ்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் போது அதிவேக போக்குவரத்து (தனியார்) கம்பனியை பொறுப்பேற்கும் போது அக்கம்பனியின் பொறுப்புக்களாக காணப்பட்ட ரூபா 114.97 மில்லியன் பெறுமதியில் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட பஸ்களின் பெறுமதியான ரூபா 109.4 மில்லியன் எதிரீடு செய்யப்பட்டிருந்துடன் இன்னும் காணப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதியான ரூபா 5.57 மில்லியன் சபையின் ஒரு பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் சம்பந்தமாக இலங்கை போக்குவரத்து சபைக்கு சட்டரீதியான உரிமை கிடைக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 (LKAS 37) - ஒதுக்கீடு செய்தல்கள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் நியமத்திற்கு இணங்க கடந்த கால சம்பவத்தின் விளைவாக சபைக்கு நிகழ்கால பொறுப்பு காணப்படுமாயின் தீர்த்துவைக்கும் வகையில் பணம் வெளிப் பாய்ச்சப்படும் தன்மை இருக்குமாயின் மற்றும் அக்கடப்பாட்டின் அளவு நம்பகரமாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமாயின் அப்பணத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வீதி விபத்துக்களுக்கான இழப்பீடாக செலுத்த வேண்டிய பெறுமதியாக அடையாளங்காணப்பட்ட ரூபா 2,171,281,116 இற்காக நிதி ஏற்பாட்டினை மேற்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சட்டப் பிரிவிடமிருந்து இது சம்பந்தமான தகவல்களை விசாரித்துப் பார்த்து உரிய பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான தேறிய பெறுமதி ரூபா 1,000 ஆன 5,297 பஸ்கள் மற்றும் தேறிய பெறுமதி இல்லாத 04 பஸ்கள் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பஸ்களில் 93 சதவீதமானவை இன்றுவரை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பஸ்களை மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பஸ்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சொத்துக்களை மீள்மதிப்பு செய்வதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேட்டுக் கணக்குகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ஒரு அறிக்கையினை வழங்குவதற்காக ஒரு வெளி கணக்காய்வு நிறுவனத்தின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு ஒரு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய சொத்துக்களின் தொகுதியை அடையாளங்கண்டு மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வரிக்கு முன்னைய தேறிய இலாபத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற செம்மையாக்கல்களின் கீழ் ஆண்டிற்கான வட்டி வருமானமாக ரூபா 278,822,033 கழிக்கப்பட்டிருந்ததுடன் அந்த முழுப் பெறுமதியும் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கிடைக்கவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 9,497,720 முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் கிடைத்த வட்டியாக செம்மையாக்கப்பட்டிருந்ததனால் கிடைத்த வட்டி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தி காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அசோக் லேலண்ட் கம்பனிக்கு சொந்தமான அதிசெகுசு பஸ்கள் அதிவேக வீதிகளில் ஓடுவதன் மூலம் பெற்ற வீதி ஆவண வருமானம் ரூபா 1,970,861,418 ஆக இருந்ததுடன் அதற்கான எரிபொருள் மற்றும் நுழைவுக் கட்டண செலவாக ரூபா 580,292,773 செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானமும் செலவும் மீளாய்வாண்டிற்கான விபரமான வருமான கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்காததுடன் சபைக்கு கிடைக்க வேண்டிய | சரியான ஒரு நடைமுறையினைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு ஒரு பணிப்பாளர் சபை பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் தீர்மானத்தின் அடிப்படையில் கணக்கு வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமானங்கள் மற்றும் செலவுகளை முறைப்படியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 15 சதவீதமான தரகுப் பணமாகிய ரூபா 208,585,297 மாத்திரம் விபரமான வருமான கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | கட்டுபெத்த அதிசொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவைக்கு மற்றும் மதுகம டிப்போவிற்குச் சொந்தமான ரூபா 15,672,007 கிரயமான இரண்டு பஸ்கள் முறையே 2014 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விபத்திற்கு உள்ளாகி உடைந்த நிலையில் காணப்பட்டிருந்தும் அந்த பஸ்களை ஆதனம், பொறி மற்றும் உபகரண பட்டியல்களிலிருந்து நீக்கி பஸ்கள் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலே கூறப்பட்ட இரண்டு பஸ்களையும் வாகன அணியிலிருந்து நீக்குவதற்கு பிரதி பொது முகாமையாளருக்கு (தொழில்நுட்பம்) தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த பஸ்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உடைந்தவையாக மாறியுள்ள சொத்துக்களை உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மஹரகம மற்றும் அங்கொட டிப்போக்களில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு திருத்திய காசுக் கணக்கின் பிரகாரம் ரூபா 4,919,470 ஆன வங்கி மேலதிகப் பற்று மீதியானது ரூபா 6,151,760 ஆக நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்ததன் காரணமாக வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 1,232,290 அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பேரேட்டு கணக்கு மீதிகளை சரியாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவருதல் வேண்டும். |
| (உ) | மட்டக்களப்பு டிப்போவின் அடையாளங்காணப்படாத ரூபா 4,585,117 செலவு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வங்கி மேலதிகப் பற்று மீதியாக காட்டப்பட்டிருந்ததனால் வங்கி மேலதிகப்பற்று மீதி அப்பெறுமதியால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | இக்கணக்குகளுக்குரிய மீதிகள் தற்பொழுது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் இது தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்து 2025 ஆம் ஆண்டின் போது உரிய சரிசெய்தல்கள் செய்யப்படும். | வங்கி கூற்றுக்களின் பிரகாரம் வங்கி கணக்கிணக்க கூற்றினை சரியாக தயாரித்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா | பிழையாகக் கணக்கீடு செய்ததன காரணமாக | வணிக கடன்பட்டோர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | 14,571,053 ஆன வணிக கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 1,544,568 மீதியும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 12,449,383 மீதியுமாக காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்கு அறவிடமுடியா கடன் நட்டத்திற்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டின் போது உரிய தீர்த்துவைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிடமுடியாக் கடன் நட்டத்திற்காக ஏற்பாடு செய்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 86,956,445 ஆன வழிகாகசு மீதியில் 01 ஆண்டிலிருந்து 02 ஆண்டுகள் வரையான காலம் பழைய ரூபா 21,500 மீதியும் 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலம் பழைய ரூபா 13,827,779 மீதியும் 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான பழைய ரூபா 7,261,972 மறை மீதியும், ரூபா 2,079,469 மீதியும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 32,007,986 மீதியும், ரூபா 813,428 மறை மீதியும் காணப்பட்டன. இவ்வாறான கழிக்காசு அடுத்துவரும் கணக்காண்டிற்கு கிடைக்க வேண்டியதாக இருந்த போதிலும் நீண்டகாலமாக இப்பெறுமதி வழிக்காசாக காணப்பட்டது. மேலும் மேலே கூறப்பட்ட ரூபா 8,075,400 மறை மீதியை உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்தது. | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் கணக்கு வைக்கும் போது ஏற்பட்ட பிழைகள் மற்றும் குறைபாடுகளின் காரணமாக இம்மீதிகள் உருவாகியுள்ளது. எதிர்வரும் காலங்களில் இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பார்த்து உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பிவைத்து அவர்களினால் வழங்கப்படும் சிபாரிசுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் மறை மீதிகளின் குறைபாடுகளை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் காலப்பகுதியின் போது வைத்தியசாலை | போக்குவரத்துச் சேவைக்காக கிடைக்க வேண்டிய பணம் உரிய ஆண்டுகளின் போது | ஆண்டிற்குரிய வருமானம் அந்த ஆண்டின் போதே அடையாளங்காணப்பட் |

| | | | |
|---|---|---|---|
| | ஆளணியினர் பிரயாணம் செய்தமைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 53,587,118 தொகை உரிய ஆண்டுகளின் வருமானமாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்யாது நடைமுறை ஆண்டின் போது வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக உரிய ஆண்டின் நிதிசார் விளைவுகள் மற்றும் நிதி நிலைமை சரியாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படவில்லை. பின்னர் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் அதுபற்றி சுட்டிக்காட்டியதன் பின்னர் இந்த பெறவேண்டிய பணம் 2024 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. | டு கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் கடந்த ஆண்டுகளுக்குரிய அடையாளங்காணப்பட்ட வருமானம் முன்னைய காலப் பகுதிக்கு செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | சபையின் உள்ளக பிரதேச வாசிகளுக்கிடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக 07 பிரதேச வாசிகளுக்குரிய ரூபா 5,443,957 ஆன பிக்குமார் கூப்பன் மற்றும் உள்ளக கொடுக்கல் வாங்கல்களுக்காக கிடைக்க வேண்டிய 124 கணக்கு மீதிகளுக்குரிய பெறுமதி ரூபா 89,706,455 வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளுக்குள் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்டதுடன் அந்த மீதி நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய கிடைக்க வேண்டிய தீயின் கீழ் காட்டப்பட்டிருந்ததனால் கிடைக்க வேண்டிய மீதி அப்பெறுமதியால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | 10 ஆண்டுகளுக்கு மேல் பழையதான இந்த மீதிகள் உள்ளக டிப்போக்களுக்கிடையே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களாகும். உரிய பதிவுகள் செய்யும் போது இடம்பெற்ற பிழையினால் இந்த மீதிகள் தொடர்ச்சியாக காணப்படுவதுடன் எதிர்காலத்தலி இந்த மீதிகளை சரிசெய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் நடைமுறைக் கணக்கினூடாக சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 06 டிப்போக்களிலிருந்தும் 04 பிராந்திய அலுவலகங்களிலிருந்தும் அடையாளம் காணமுடியாத மற்றும் கணக்கீட்டு தவறுகளின் காரணமாக உருவாகிய ரூபா 8,603,078 பெறவேண்டிய வருமானமாக | இந்த மீதிகள் சம்பந்தமாக கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதனால் வழங்கப்படுகின்ற அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அதனை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து வழங்கப்படுகின்ற | கணக்கீட்டுத் தவறுகள் மற்றும் அடையாள்ங்காணப்படாத மீதிகளை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தபபட்ட வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் அதிரித்து காட்டப்பட்டுள்ளதுடன் அதனுள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 492,003 மீதியும் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 2,600,222 மீதியும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 5,510,853 மீதியும் காணப்பட்டது. | அறிவுறுத்தல்களுக்கு இணங்க எதிர்காலத்தில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஓ) | தலைமை அலுவலகத்தினால் வெளி நிறுவனங்களுக்கு எரிபொருளை வழங்கியதாக 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 1,295,263 பெறுமதிக்குரிய தரப்பினர்கள் சபைக்கு பணத்தை செலுத்தியிருந்தும் அவை ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கடன்பட்டோர் மீதி அப்பெறுமதியால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | இடம்பெற்ற தவறு 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்பட்டுள்ளது. கணக்கு வைத்தலினை பொறுப்பாக செய்யுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கு வைப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 09 டிப்போக்களின் 19 கடன்கொடுத்தோர் தொடர்பாக ரூபா 26,288,120 தொகையான வணிக மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் வரவு மீதி காணப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் மீதிகள் அப்பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து பார்த்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் சரியான வகையில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்கொடுத்தோர் மீதிகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | ஒரு கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்த உதிரிப்பாகங்களுக்காக கொடுப்பனவு செய்யாமையின் காரணமாக கம்பனி ஒரு நடுவர் தீர்ப்பு வழக்கினை தொடுத்திருந்ததுடன் அது 2023 ஆம் ஆண்டின் போது அமெரிக்க டொலர் 3,076,068 இனை செலுத்துவதன் மூலம் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. அப்பெறுமதியானது வழக்கு தீர்ப்பின் பிரகாரம் தலைமை அலுவலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தும் பிராந்திய அலுவலகங்களில் மற்றும் பிராந்திய வேலைத்தளங்களில் ரூபா 397,247,100 பெறுமதி கடன்கொடுத்தோராக காணப்பட்டிருந்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் வணிகக் கடன்கொடுத்தோர் மீதி அப்பெறுமதியால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | கணக்கு வைக்கும் பிழைகள் மற்றும் தவறுகளின் காரணமாக உருவாகிய மீதியாக இருப்பதனால் எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிராந்திய வேலைத்தளங்களின் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கணக்குகளை கணக்கிணக்கம் செய்தல் காலரீதியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (கா) | நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் மாதிரி கட்டமைப்பிற்கு இணங்க பொறுப்பினை அடையாளம் காண்பதாயின் அது கடந்த கால கொடுக்கல் வாங்கல் அல்லது சம்பவத்தின் பெறுபேறாக நிகழ்தலும் அதனைத் தீர்த்துவைக்கும் போது எதிர்கால பொருளாதார பிரதிபலன் வெளியே செல்லும் சாத்தியம் காணப்படுவதும் நிகழ்கால கடப்பாடு காணப்பட வேண்டியதும் ஆகிய காரணிகள் காணப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அடையாளங்காண முடியாத மற்றும் பிழையான கணக்கீட்டு பதிவுகளின் காரணமாக உருவாகிய மொத்த பெறுமதி ரூபா | 2025 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக ஆராய்ந்து பார்தது சரிசெய்வதற்கு நடடிக்கை எடுக்கப்படும். | பிழையான கணக்கீட்டு பதிவுகள் மற்றும் அடையாளங்காணப்படாத மீதிகளை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 269,047,118 ஆன வணிக கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்டது. | | |
| (கி) | போக்குவரத்துச் சபையின் உள்ளக பிராந்திய பிரிவுகளுக்கிடையே இடம்பெறுகின்ற பரிமாற்று கொடுக்கல் வாங்கல்களின் 45 பிராந்திய பிரிவுகள் தொடர்பான ரூபா 32,885,995 பெறுமதியானது நிதி நிலைமை கூற்றில் வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததனால் செலுத்த வேண்டிய மீதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது இம்மீதிகளை சரிசெய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | உள்ளக கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைக் கணக்கினூடாக சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கீ) | இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நாளாந்த இருப்பு மற்றும் விற்பனை அறிக்கைகளுக்கு இணங்க மீளாய்வாண்டிற்குரிய எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை விற்பனை வருமானம் ரூபா 477,560,510 ஆக இருந்த போதிலும் அது ரூபா 475,951,983 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் விற்பனை வருமானம் ரூபா 1,608,527 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் மற்றும் பிழைகள் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்யும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (கு) | இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அறிக்கைக்கு இணங்க 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 335,413,584 பெறுமதியான டீசல் இருப்பு இறுதிக் கணக்குகளில ரூபா 336,308,757 ஆக காட்டப்பட்டிருந்ததனால் ரூபா | கொள்வனவு செய்தலினை கணக்கீடு செய்யும் போது பிழைகள் மற்றும் குறைபாடுகள் இடம்பெற்றுள்ளதுடன் அவை சரி செய்யப்பட்டிருந்தும் இதனால் 2024 ஆம் ஆண்டிற்கான இலாபத்திற்கு தாக்கம் இடம்பெறுவதில்லை. | கொள்வனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படும் வகையில் உள்ளக கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 895,173 இறுதிக் கணக்குகளில் அதிகரித்தும் 2024 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 131,718,653 ஆன பெற்றோல் இருப்பு ரூபா 129,308,242 ஆக இறுதிக் கணக்குகளில் அறிக்கையிடப்பட்டதன் அடிப்படையில் ரூபா 2,410,411 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (கூ) | பிக்கு கூப்பன்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,913,736 மற்றும் பொலிஸ் வவுச்சர்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,999,641 என்பனாவாக ரூபா 5,913,377 பெறுமதி ஏனைய செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் அப்பெறுமதியால் அதிகரித்தும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 2,999,641 குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பிக்கு கூப்பன்கள் மற்றும் பொலிஸ் வவுச்சர்கள் சம்பந்தமாக கணக்கு வைக்கப்பட வேண்டிய சரியான முறைமை தொடர்பாக அனைத்து டிப்போக்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் உள்ளககட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (கெ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது வைத்தியசாலை ஆளணியினர்கள் பயணம் செய்தமைக்காக கிரிந்திவெல டிப்போவினால் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 2,513,468 பெறுமதி முன்னைய ஆண்டிற்கான திரண்ட இலாபத்திற்கு வரவு வைத்ததன் காரணமாக முன்னைய ஆண்டிற்கான இலாபம் மற்றும் கிடைக்க வேண்டிய மீதி அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக சரிசெய்தல் மேற்கொள்ளப்படும். | கிடைக்க வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கே) | மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய கிரிந்திவெல டிப்போவின் கிடைக்க வேண்டிய சிசுசெரிய ரூபா 1,552,950 மீதி மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றில் காட்டப்படாது முன்னைய ஆண்டிற்கான திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்கி கிடைக்க வேண்டிய கணக்குகளிலிருந்து பதிவழித்ததன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் அப்பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான இலாபம் குறைத்துக் காட்டப்பட்டிருந்து. | 2025 ஆம் ஆண்டின் போது இது தொடர்பான சரிசெய்தல் செய்யப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கொ) | 2024 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை கிரிந்திவெல டிப்போவுக்கு கிடைக்க வேண்டிய பொலிஸ் வவுச்சர்களின் பெறுமதியான ரூபா 2,941,638 கிடைக்க வேண்டிய கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் திரண்ட இலாப செம்மையாக்கல் கணக்கிற்கு செம்மையாக்கியிருந்ததன் காரணமாக கிடைக்க வேண்டிய மீதியும் முன்னைய ஆண்டிற்கான திரண்ட இலாபமும் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்த மீதி சம்பந்தமாக உள்ளக கணக்காய்வு பிரிவினால் வழங்கப்படுகின்ற அறிக்கையை பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வழங்கப்படுகின்ற தீர்மானத்திற்கு இணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொளளப்படும். | கிடைக்க வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கோ) | உள்ளக கடன்கொடுத்தோர் மீதியாக கெக்கிராவ டிப்போவின் கணக்குகளில் காணப்பட்ட ரஜரட பிராந்திய அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,000,000 பணம் மீளாய்வாண்டின் போது திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டு | உள்ளக டிப்போக்களுக்கிடையே பணம் பரிமாற்றப்படுவதுடன் இடம்பெற்றுள்ள பிழைகளை சரிசெய்வதற்ாக இப்பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டன. | சபையின் உள்ளக கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதற்குரிய உள்ளகக் கடப்பாடுகளை வலுப்படுத்தததல் வேண்டும். |

ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. இது சபையின் உள்ளக கடன்கொடுத்தோர் மீதி என்பதனால் ஏடுகளிலிருந்து நீக்கும் போது திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்கியதனால் திரண்ட இலாபம் அத்தொகையால் அதிகரித்திருந்தது.

## 1.5.4 கணக்காய்விற்காக எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைக ளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தி ன் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | ரூபா | | |
| (அ) | மோட்டார் வாகனத்தி ன் கிரயம் | 331,764,253 | 141,593,116 | 190,171,137 | எதிர்வரும் காலங்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பட்டோலையில் உள்ள மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மீதிக்குமிடையேய ான வித்தியாசத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகள் , பேரேட்டு கணக்குகள், மற்றும் நிதிக்கூற்றுக்க ளின் மீதிகளை ஒப்பீடு செய்து சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | பஸ்களின் கிரயம் | 32,443,839,162 | 30,161,984,715 | 2,281,854,447 | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பட்டோலையிலுள் ள மீதிக்கும் நிதிக்கூற்றுககளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடைே ய காணப்படுகின்ற வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படு ம். | பட்டோலை, பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்க ளிலுள்ள மீதிகள் ஒப்பீடு செய்யப்பட்டு சரிசெய்யப்படு தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | அலுவலக உபகரணங்களின் கிரயம் | 255,849,892 | 178,779,950 | 77,069,942 | வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படும். | கணக்குகளும் பதிவேடுகளும் ஒப்பிடப்பட்டு சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | ஏனைய சொத்துக்கள் கிரயம் | 75,842,984 | 70,624,478 | 5,218,506 | வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படும். | கணக்குகளும் பதிவேடுகளும் ஒப்பிடப்பட்டு சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | டிக்கட் இயந்திர கிரயம் | 266,417,397 | 261,441,077 | 4,976,320 | வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படும். | கணக்குகளும் பதிவேடுகளும் ஒப்பிடப்பட்டு சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மஹரகம டிப்போவின் மக்கள் வங்கி சேமிப்புக்களின் மீதி | 61,307,500 | 57,027,391 | 4,280,109 | வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படும். | வங்கி மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | வணிக கடன் பட்டோர் மீதி | 98,034,414 | 2,041,325 | 95,993,089 | வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படும். | கணக்குகளும் பதிவேடுகளும் ஒப்பிடு செய்து சரிசெய்தல் வேண்டும். |
| (ஏ) | வணிக டன் கொடுத்தோர் மீதி | 1,592,675,315 | 981,294,735 | 611,380,580 | வித்தியாசம் எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்படும். | கணக்குகளும் பதிவேடுகளும் ஒப்பிடு செய்து சரிசெய்தல் வேண்டும். |

### 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 118,371,641 தொகையும் நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 83,545,053 தொகையும், தண்டப்பணம் மற்றும் தண்டப்பணத்தை அறவிடுதல் ரூபா 234,918,763 தொகையும், நிலுவையான சம்பள முற்பணங்கள் ரூபா 4,725,743 தொகையும், நானாவித கடன்பட்டோர் ரூபா 2,623,156 தொகையும், ஏனைய பெறவேண்டிய வருமானங்கள் ரூபா 525,000 தொகையும், ரஜரட பிராந்திய அலுவலகத்திற்குரிய டிப்போக்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த | சேமலாப நிதியத்தின் கணக்குவைக்கும் தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தண்டப் பணத்தை கணக்கு வைக்கும் பிழைகள் சரிசெய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவழிப்பதற்கான நடைமுறையை பின்பற்றி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

வேண்டிய 19 கணக்கு மீதிகளுக்குரிய ரூபா 11,036,274 மீதியும் என்பவாக ரூபா 455,745,630 தொகை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டு முன்னைய ஆண்டிற்கான திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் மீளாய்வாண்டிறகான நட்டம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.6 கணக்காய்விற்காக எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | செயற்படுத்தப் படாத கணக்குகள் | 1,290,782,782 | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக விபரமான பட்டோலை | இதற்காக ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. சிபாரிசுகளைப் பெற்று எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | விபரமான பட்டோலையைத் தயாரித்து பிரமாணத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 75,166 | மூல ஆவணங்களும் விபரமான பட்டோலையும் | இந்த மீதிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, எந்த தகவலும் தேடிக்கண்டு பிடிக்க முடியாதவை ஆனதுடன் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பிவைத்து அவர்களின் சிபாரிசுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரு குழுவின் மூலம் புலனாய்வு செய்து நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | வணிக பெறவேண்டிய மீதிகள் | 26,412,773 | மூல ஆவணங்களும் விபரமான பட்டோலையும் | இந்த மீதிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, எந்த தகவலும் தேடிக்கண்டு பிடிக்க முடியாதவை ஆனதுடன் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பிவைத்து அவர்களின் சிபாரிசுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரு குழுவின் மூலம் புலனாய்வு செய்து நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | முற்பண மீதிகள் | 3,257,762 | மீதிகளிதலுக்கான விபரமான பட்டோலை | இந்த மீதிகளுக்குரிய ஊழியர்கள் சேவையை கைவிட்டுச் செல்லல் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளால் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சிபாரிசுக்கு இணங்க எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | விபரமான பட்டோலையைத் தயாரித்து பிரணமாங்களின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 10 மற்றும் 16 ஆம் பிரிவுகள் | சேவை வழங்குனரினால் ஒவ்வொரு மாதம் தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஊழியர் சேமலாப பங்களிப்பு பணத்தை நிதியத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தாமதித்து செலுத்தப்படுகின்ற பங்களிப்பு பணத்திற்கு மிகைக் கட்டணம் அறவிடப்படும். சபை ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணத்தை தாமதித்து செலுத்தியதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 26,505,105 மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | தற்பொழுது சேமலாப நிதியம் முறைப்படியாக செலுத்தப்படுகின்றது. வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் இல்லை. | ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணத்தை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 1982 இன் 03 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்திய 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 மற்றும் 27 ஆம் பிரிவுகள் | சேவை வழங்குனரினால் ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்பு பணத்தினை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க | 2015 செப்தெம்பர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அனைத்து கணக்காளர்களுக்கும் நியதிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு பணத்தை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது பங்களிப்பு பணத்தை தாமதித்து செலுத்தியதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 3,079,098 மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச சட்டத்தின் 05(1) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு அவர்களுக்கு தகமையுள்ள பணிக்கொடைப் பணத்தை சேவையிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு 30 நாட்களுக்கு முன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காததன் அடிப்படையில சபையின் தலைமை அலுவலகம், 02 பிராந்திய அலுவலகங்களினால், 12 டிப்போக்களினால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,247,571 பணிக்கொடை கொடுப்பனவு மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை மற்றும் வாய்மொழி மூல அறிவுறுத்தல்களின் மூலம் பணிக்கொடையை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. செலுத்தப்பட்டாதிருக்குமாயின் உரிய உத்தியோகத்தர்களுக்கு சபை நடைமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடை கொடுப்பனவானது பிரமாணங்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டியதுடன் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டண அதிகாரச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 07 (உ) பிரிவு | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஊழியரின் மொத்த சம்பளம் ரூபா 25,000 இனை மிகைக்கின்ற சந்தர்ப்பத்தில் அறவிடப்படுகின்ற ரூபா 25 முத்திரைக் கட்டணம் ஒவ்வொரு ஆண்டின் காலாண்டு முடிவடைந்து பதினைந்து நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையின் ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் அடிப்படையில் அறவீடு செய்யப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 37,169,665 இனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 5,860,427 பெறுமதி 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்கும் இடையேயும், ரூபா 13,701,275 பெறுமதி 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடையேயும், ரூபா 9,385,033 பெறுமதி 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடையேயும் ரூபா 2,845,143 பெறுமதியானது 10 | 2025 ஆம் ஆண்டின் போது இந்த வரியை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க முத்திரைக் கட்டணத்தை அனுப்பிவைத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியையும் உள்ளடக்கியிருந்தன | | |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 136 இலிருந்து 141 வரை மற்றும் 225 | 2024 நவம்பர் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலைய கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டவாறு பாணந்துறை டிப்போவின் டிப்போ முகாமையாளரால் 30 வெற்றுக் காசோலைகளுக்குதமது கையொப்பத்தை இட்டு அந்த வெற்றுக் காசோலைகள் உதவி முகாமையளரின் (நிதி) பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் இவ்வாறான தவறுகள் செய்யாதிருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நிதிப்பிரமாணம் 212(2)(v) | செலுத்திய சம்பள முற்பணங்களின் முழுத் தொகையும் முற்பணம் செலுத்திய மாதத்தின் இறுதியில் சம்பள பட்டியலிருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டின் இறுதித் திகதி வரை முற்பணங்கள் வழங்கப்பட்டு 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,462,777 தொகையும் 05 ஆண்டுகளுக்கும் 10 | உள்ளக கணக்காய்வு பிரிவின் ஆலோசனைகள் மற்றும் சிபாரிசுகளை பணிப்பாளர் சபைக்கு சமர்பித்து அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முற்பணங்கள் தீரத்துவைக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 1,120,386 தொகையும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 10,647,065 தொகையும் 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 11,000,771 தொகையுமாக மொத்த பெறுமதி ரூபா 37,907,808 காணப்பட்டது. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 387 | காசோலை மூலம் செய்யப்படுகின்ற அனைத்து கொடுப்பனவகளுக்குமாக தமது வங்கி மீதி போதுமானது என்பதனை செலுத்ததும் உத்தியோகத்தரினால் தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன் எந்த அரசாங்கத்திலும் வங்கி கணக்கிலிருந்தும் மேலதிகப் பற்றினை பெற்றுக்கொள்வது தடை செய்யப்பட்டிருந்த போதிலும் சபையினால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 348,040,115 மேலதிகப் பற்று பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக மேலதிகப் பற்று வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 866,081 | இதன் பின்னர் எந்த மேலதிகப்பற்று வசதியையும் பெற்றுக்கொள்ள வேண்டாம் என உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | வங்கி கணக்குகளிலிருந்து மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகப் பற்றுக்கள் தேவைப்படுகன்ற டிப்போக்களுக்கு உள்ளக ரீதியாக முற்பணங்களை வழங்கும் வேலைத் திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | நிதிப்பிரமாணம் 396(அ)(i) மற்றும் (iii) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் காலம் 06 மாதங்களை மிகைத்த ரூபா 224,963,319 பெறுமதியானது 10 டிப்போக்கள், 02 பிராந்திய அருவகலங்கள், 03 பிராந்திய வேலைத் தளங்கள், தலைமை அலுவலகம் என்பவற்றினால் கொடுப்பனவுகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 70 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்ட நிதிப் பிரச்சினைகளின் அடிப்படையில் காசோலைகள் வைப்புச் செய்யப்படாததனால் எதிர்வரும் காலங்களில் இக்காசோலைகளை சரியான திகதிகளில் தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தினை திருத்தம் செய்யும் 21/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | விழா முற்பண மீதிகள் 08 மாத காலத்திற்குள் உரிய ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 16,585,447 மீதியும் | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஆலோசனைகளும் சிபாரிசுகளும் பணிப்பார் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முற்பணங்கள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 3,702,189 மீதியும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 4,570,797 மீதியும் 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்குமிடைட்ட ரூபா 10,730,721 மீதியும் காணப்பட்டது. அதற்கிணங்க விழா முற்பணங்களை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 4.2 ஆம் பிரிவு | ஒரு தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 3,000 இனை மிகைத்து இருக்கையில் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் முழு நேரமாக விடுவிக்கப்படலாம் என்ற போதிலும் சபையில் செயற்படுகின்ற 05 தொழிற்சங்கங்களுக்காக 22 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக மிகையாக விடுவிக்கப்பட்டிருந்த 12 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓடுதல் பிரிவில் 2022 இன் 01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு உட்பட்டும் தலைவரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டும் வழங்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிற்சங்க அங்கத்தவர்கள் விடுவிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2021/01 ஆம் இலக்க 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.9 ஆம் பிரிவு | கணக்கு மீதிகளை ஏடுகளிலிருந்து அகற்றும் போது முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் முறையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சபையினால் அங்கீகரித்த நடைமுறைக்கு முரணாக ரூபா 3,934,404,115 பெறுமதியானது ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | பெறுமதியில் 98 சதவீதமானவை பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டுடன் தொடர்புபட்டதாகும். உள்நாட்டு கொள்வனவு முற்பணங்களை தீர்த்துவைப்பது தொடர்பான மீதிகளும் இதில் உள்ளடங்கும் | பேரேட்டுக் கணக்குகளை தயாரிப்பதற்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிர்ணயிக்கப்பட்ட நாட்களை மிகைத்து 60 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2025 ஏப்ரல் 29 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது என ஏற்றுக்கொள்கிறோம் | நிதிக்கூற்றுக்கள் ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய | போக்குவரத்துச் சபையின் அனைத்து டிப்போ சுற்றாடலில் மற்றும் பிராந்திய வேலைத்தளங்களிலுள்ள எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை | 04 விடயங்களினால் கழிவுப் பொருட்களை அகற்றும் நடைமுறையினை முறைமைப்படுத்துவதற்கு | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுப் பொருட்களை அகற்றுவது சம்பந்தமான அனுமதிப்பத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றாடல் அதிகாரச் சட்டம் | கழிவுப் பொருட்கள், பிளாஸ்ரிக் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் என்வற்றை அகற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரித்த நடைமுறையை பின்பற்றி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையின் 109 டிப்போக்களில் 52 டிப்போக்களும் 12 பிரந்திய வேலைத் தளங்களில் 08 வேலைத் தளங்களும் இந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முடியாதுள்ளது. | பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,032,142,880 நட்டமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,098,934,630 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,131,077,510 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சம்பளமும் கூலியும், நிருவாக மற்றும் தாபனச் செலவுகள், பஸ்களின் செயற்பாட்டுக் கிரயம் என்பன அதிகரித்தலும் ஏனைய வருமானங்கள் குறைவடைதலும் பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| வருமானம் செலவு | ஆண்டு (2024) (ரூபா மில்.) | ஆண்டு (2023) (ரூபா மில்.) | அதிகரித்தல் சதவீதம் (%) |
|---|---|---|---|
| வீதி ஆவண வருமானம் | 72,748.38 | 72,162.70 | 0.82 |
| ஏனைய வருமானம் | 2,682.52 | 4,756.83 | (43.60) |
| பஸ்கள் செயற்பாட்டு செலவுகள் | 20,541.71 | 18,610.42 | 10.38 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை | 39,131.30 | 41,464.74 | (5.6) |
| ஏனைய கிரயம் | 16,165.25 | 15,400.62 | 4.96 |

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| விகிதாசாரம் | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் சதவீதமாக | 3.6 | 2.06 |
| தேறிய இலாப விகிதம் சதவீதமாக | 0.3 | 1.52 |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 1.23:1 | 1.24:1 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 0.95:1 | 0.94:1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| மஹரகம டிப்போவிற்குச் சொந்தமான 19,800 லீற்றர் எரிபொருளை கள்ளுசியப்படுத்தக்கூடிய ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் காணப்பட்டிருந்தும் தெரிவுப் பரீட்சிப்பிற்கு உட்பட்ட 2024 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 6,075,784 பெறுமதியான 21,244 லீற்றர் எரிபொ திடமிருந்து இலாபத்தை பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் அசோக் லேலன்ட் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொண்ட பஸ்ஸிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக போக்குவரத்துச் சபையின் அல்லாத வெளி சாரதியினால் வீதி ஆவண வருமானத்திலிருந்து பணம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த | மஹரகம டிப்போவில் இடம்பெற்றுள்ள இந்த நிலைமை தொடர்பாக விவசாரணைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | வெளி நிறுவனத்திடமிருந்து ஓடுகின்ற பஸ்களுக்காக எரிபொருளினைப் பெற்றுக்கொள்ளும் முறையான ஒரு நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

பஸ்களுக்கு அண்மையிலுள்ள டிப்போக்களின் மூலம் எரிபொருளை வழங்குவதறகாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | குருனாகல் தெற்கு, கெப்பெடிபொல, பதுளை ஆகிய டிப்போக்களினால் 2024 ஆம் ஆண்டின் தொடக்க 09 மாதங்களின் போது தமது டயர் தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக முன் பொருத்தப்பட்ட மற்றும் மீள்நிரப்பப்பட்ட டயர்களிலிருந்து 2,403 டயர்கள் நிர்ணயிக்கப்பட்ட நியம தரம் இல்லாததன் காரணமாக உரிய காலத்திற்கு முன்பே பயன்படுத்த முடியாது போனதுடன் அந்த டயர்களுக்காக ரூபா 13,460,013 தொகையினை அதற்கான பிரதியீடாக டயர் வழங்குனர்களிடமருந்து அறவீடு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | டயர் பயன்பாட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்கும் பயிற்சி பெற்ற நபர்களின் பற்றாக்குறை காணப்படுவதனால் உரிய காலத்திற்கு முன்பே செயற்படாது போனமை அறிக்கையினை தயாரிப்பதற்கும் பிரச்சினை காணப்பட்டது. அதனால் அறவீடு செய்தல் தாமதமடைந்துள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட தரத்தீனைக் கொண்ட முன் பொருத்தப்பட்ட மற்றும் மீள் நிரப்பப்பட்ட டயர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பிரதியீட்டினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கண்டி தெற்கு டிப்போ தமது டயர் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக டயர்களை முன் பொருத்துதல் செய்தல் மற்றும் மீள்நிரப்புதல் செய்தலினை மூன்று வழங்குனர் நிறுவனத்தினூடாக மேற்கொண்டிருந்ததுடன் இந்த முன் பொருத்துதல் மற்றும் மீள்நிரப்புதல் டயர்கள் உரிய காலத்திற்கு முன்பே செயற்படுத்த முடியாது | உரிய காலத்திற்கு முன்பே பயன்படுத்த முடியாது போன டயர்கள் தொடர்பாக வழங்கல் நிறுவனம் பௌதீக ரீதியாக பரீட்சித்து இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காமையும் வெற்றியளித்திருக்காத டயர்களை முறையான இணக்கப்பாடின்றி மீள்நிரப்புவதற்கு அனுப்பியதனால் வழங்குனர்களின் பரீட்சிப்பிற்கு சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | உரிய காலத்திற்கு முன்பே பயன்படுத்த முடியர்து போனமைக்காக பிரதியீட்டினை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போனமையின் காரணமாக 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய பிரதியீடாக ரூபா 13,764,524 தொகையினை வழங்குனருக்கு தெரிவித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கொவிட் காலப்பகுதியின் போது வைத்தியசாலை ஆளணியினர் போக்குவரத்து செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சபையின் பஸ்களை ஈடுபடுத்தியதனால் கிடைக்க வேண்டிய ரூபா 169,292,831 மீளாய்வாண்டின் இறுதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சின் செயலாளருக்கு, நிதி உத்தியோகத்தருக்கு வேண்டுதல் விடுகிக்கப்பட்டிருந்தும் நிலுவைப் பணம் கிடைத்திருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பல ஆண்டுகளாக போக்குவரத்து சபையின் பஸ்களின் மூலம் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக அந்த அந்த டிப்போக்களினால் சேகரிக்கப்பட்ட ரூபா 230,389,309 பெறுமதியான பொலிஸ் பஸ் அனுமதிப்பத்திரங்கள் சபையின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும் மீளளிப்புச் செய்வதற்காக அந்த அனுமதிப்பத்திரங்கள் பொலிஸ் தீணைக்களத்திற்கு அனுப்பிவைக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பெறுமதியை அறவீடு செய்ய முடியாதிருந்தது. அவ்வாறே பொலிஸ் உத்தியோத்தர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக சபை மேற்கொண்ட செலவு பொலிஸ் | பொலிஸ் வவுச்சர்கள் சம்பந்தமான ஒரு அறிக்கை தலைமை அலுலவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பதற்கு இடவசதிகள் இல்லாமையால் டிப்போக்களில் வைத்திருக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பொலிஸ் பிரிவிற்கும் அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதன் மூலம் அதற்குரிய பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொலிஸ் வவுச்சர்களை தாமதிக்காது மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திடமிருந்து மீளளிப்புச் செய்தல் வேண்டும். எனினும் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 யூலை மாதம் வரை சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,650,938 தொகையான வவுச்சர்களை மீளளிப்புச் செய்வதற்காக பொலிஸ் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கொரவ்பொதான டிப்போவில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டதனால் அச்செலவுகளை மீளளிப்புச் செயய முடியாதிருந்தது. | | |
| (இ) | மத்திய பஸ் அலுவலகம் மற்றும் நிறுத்துமிடங்களின் காணியில் உள்ள 59 கடைகள், 15 நடமாடும் வண்டில்கள், இலங்கை வங்கி கிளை மற்றும் பொது மலசல கூட முறைமைகள் மாதாந்த மற்றும் நாளாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்து கடை வாடகை வருமானமாக ரூபா 23,565,003 தொகையும் மின்சார கட்டணமாக ரூபா 5,621,650 தொகையும் நீர் கட்டணமாக ரூபா 15,292,580 தொகையுமாக ரூபா 44,479,233 மீளாய்வாண்டின் இறுதி வரை கிடைக்க வேண்டியதாக இருந்தும் அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை செலுத்தமாறு உரிய கடை உரிமையாளருக்கு பதிவுத் தபாலில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முறையான உடன்படிக்கையுடன் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டியதுடன் மின்சாரம், நீர் கட்டணங்களை தாமதமின்றி அறவீடு செயதல் வேண்டும். |
| (ஈ) | வாடகைதாரர்களுக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ள மத்திய பஸ் அலுவலகங்களில் அமைந்துள்ள 30 கடைகளின் குத்தகை வாடகை உடன்படிக்கையானது மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை 05 ஆண்டுகளிலிருந்து 47 ஆண்டுகள் வரையான காலமாக காலாவதியாகியிருந்தும் புதிய உடன்படிக்கைகளை செய்து | காணிகளின் உரிமை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் உள்ளதால் உரிமையை இலங்கை போக்குவரத்து சபினால் பொறுப்பேற்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் இணக்கப்பாடு இல்லாததனால் வியாபார நிலையங்களை பொறுப்பேற்று மேலதிக | புதிய குத்தகை வாடகை உடன்படிக்கைகளை செய்து கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை முயற்சி எடுக்கவில்லை. | |
| (உ) | மத்திய பஸ் அலுவலக காணியில் அமைந்துள்ள பொது மலசல கூட முறைமையின் குத்தகை உடன்படிக்கை நிபந்தனையின் இலக்கம் 21 இற்கு இணங்க குத்தகைதாரர் குத்தகை உடன்படிக்கை நிபந்தனை அல்லது நியதி எதனையும் மீறுகின்ற வகையில் செயற்படுவாராயின் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிபந்தனை இலக்கம் 04 மற்றும் 13 குத்தகைதாரரினால் நேரடியாக மீறப்பட்டு மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 8,960,000 வாடகையாகவும் நீர் மற்றும் மின்சார கட்டணத்திற்காக ரூபா 15,988,669 தொகையுமாக மொத்தமாக ரூபா 24,948,669 செலுத்த தவறியிருந்தும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் செலுத்தப்படவில்லையாயின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதாகவும் நிலுவைப் பணத்தை செலுத்துமாறும் காட்டப்பட்டுள்ளது. உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதனை தவிர்க்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியுள்ளது. அதற்கு எதிராக ஆலோசனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நீதிமன்ற கட்டளையை கவனத்தில் கொண்டு நிலுவைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 10 மாதங்களுக்குள் மீள அறவீடு செய்வதற்காக உச்ச அளவாக ரூபா 40,000 இற்கு உட்பட்டு விசேட முற்பணக் கடன் சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 10,472,557 தொகை விசேட முற்பண கடன் மீதி காணப்பட்டிருந்தும் அவற்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளரர் சபையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்க எதிர்வரும் காலங்களில் இந்த மீதி சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். | விசேட முற்பணங்கள் வழங்கி 10 மாதங்களுக்குள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | வெளித்தரப்பினர்களிடமிருந்து பெற்று சபையின் மூலம் ஓடப்படுகின்ற அதிசொகுசு | சதவீதத்தினை அதிகரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் | வெளித்தரப்பினர்களின் இணக்கப்பாட்டினைப் |

| | | | |
|---|---|---|---|
| | பஸ்களுக்காக ஆகக் குறைந்தது இலங்கை போக்குவரத்து சபை சதவீதத்தினை 2024 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 20 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய தரப்பினரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினர்களின் இணக்கப்பாடு கிடைக்காமையின் காரணமாக தீர்மானத்தினை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுத்து பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்துச் சபையின் வாகனத் தொகுதியினைப் பயன்படுத்துவதற்கு தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் பஸ் பொடியை திருத்தம் செய்தல்கள் சபையின் 12 பிராந்திய வேலைத் தளங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டிற்காக அந்த வேலைத்தளங்களுக்கு 17,928 அலகுகளின் உற்பத்தி இலக்குகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் உற்பத்தி செயயப்பட்டிருந்த அலகுகளின் அளவு 3,831 ஆகும். அவற்றில் முன்பொருத்துதல் டயர்களின் உற்பத்தியானது இலக்கிடப்பட்ட உற்பத்தியில் 16 சதவீதமாக இருந்ததுடன் பஸ்பொடி கியர் பெட்டி, ஓல்னேடர், எரிபொருள் பம்பி, எரிபொருள் பாய்ச்சும் தயாரிப்பு என்பன 50 சதவீதமான இலக்கினையேனும் அடைந்துகொண்டிருக்கவில்லை. | 13 பிராந்திய வேலைத்தளங்களின் ஒட்டுமொத்த உற்பத்தியை ஆகக்குறைந்த பெறுமதிக்கு கொண்டு வருவதற்கு தாக்கம் ஏற்படுத்தியுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி இலக்குகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உற்பத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவைப்படும் வகையில் நடைமுறைகளை மேம்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | வாகன தொகுதி போதியதாகவும் வலுவானதாகவும் இல்லாததன் காரணமாக ரஜரட ஊவா மற்றும் வயம்ப பிராந்திய அலுவலகங்களைச் சேர்ந்த டிப்போக்களால் 77 தூரம் | பஸ்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானவை மற்றும் சாரதிகள் நடாத்துனர்கள் பற்றாக்குறையினைப் போல திருத்தம் செய்வதற்காக பொறியியல் தொழில்நுட்ப | பஸ் போக்குவரத்து சேவைகளை சிறந்த மட்டத்தில் பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயண சேவைகளும் 167 குறுந்துாரப் பயண சேவைகளும் செயற்படாததனால் மீளாய்வாண்டின் போது ரூபா 3,052,724,115 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | ஊழியர்கள் இல்லாமை இதற்கு காரணமாக உள்ளது. | |
| (இ) | ஊவா பிராந்தியத்திற்குரிய டிப்போக்களின் வாகன தொகுதியில் காணப்படுகின்ற 113 பஸ்களின் எரிபொருள் பம்பிகளை திருத்தம் செய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் பஸ்களின் எரிபொருள் பயன்பாடு ஒரு கிலோ மீற்றருக்கு 2.54 கிலோ மீற்றராக இருந்தது. இந்த பஸ்களின் எரிபொருள் பம்பியினை திருத்தம் செய்து எரிபொருள் பயன்பாட்டினை பிராந்தியத்தின் ஒட்டுமொத்த எரிபொருள் சமப்படுத்துதலின் அடிப்படையில் ஒரு லீற்றருக்கு 3.1 கிலோ மீட்டர் மட்டத்தினை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் 2024 ஆம் ஆண்டில் எரிபொருள் பயன்பாடு அண்ணளவாக ரூபா 3,709,322,727 ஆக இருக்க வேண்டிய போதிலும் பிராந்தியத்தின் முழு எரிபொருள் செலவு ரூபா 4,523,564,544 ஆக இருந்ததனால் ரூபா 814,241,617 அதாவது செலவில் 18 சதவீதத்தினை சேமிக்க கூடியதாக இருந்தது. | எரிபொருளின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | எரிபொருள் பம்பியினை காலரீதியாக திருத்தம் செய்தல் வேண்டும். |

## 3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனியின் 20 பஸ்களுக்கு டீசல் வழங்குதல் மஹரகம டிப்போவின் மூலம் இடம்பெறுவதுடன் உரிய கம்பனியின் பஸ்களுக்கு எரிபொருளை வழங்கும் போது ரூபா 500,000 பணம் வைப்பாகப் | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து பார்த்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தலினை கண்காணிப்பு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்று அப்பணத்தை மிகைக்காத வகையில் எரிபொருளை வழங்குவதற்கும் அவ்வாறு வழங்கிய எரிபொருளின் பெறுமதியை தீர்த்துவைத்ததன் பின்னர் மீண்டும் எரிபொருள் வழங்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக மஹரகம டிப்போ முகாமையாளரினால் மேற்கூறிய கம்பனியிடமிருந்து ரூபா 250,000 வைப்பினை மாத்திரம் பெற்று வைப்பு பணத்தினை மிகைத்து ரூபா 3,374,040 பெறுமதியான 10,884 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது உரிய கம்பனி கலைக்கப்பட்டுள்ளதனால் இப்பணத்தை அறவீடு செய்ய முடியாத நிலைமை உருவாகியிருந்ததுடன் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிவேக வீதி (தனியார்) கம்பனியின் தலைவரினால் 2023 ஆம் மாதத்திலிருந்து மஹரகம டிப்போவிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளது என டிப்போ அதிகாரி மஹரகம டிப்போவிற்கு தெரியப்படுத்தியிருந்தும் அத்திகதியின் பின்னர் ரூபா 2,291,900 பெறுமதியான 7,390 லீற்றர் எரிபொருட்கள் உடன்படிக்கையின்றியும் முறையான அங்கீகாரமின்றியும் மஹரகம டிப்போவினால் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | NC மற்றும் NB தொகுதிகளைச் சேர்ந்த பாஸ்களை திருத்தம் செய்வதற்காக தேவையான பௌதீக மற்றும் மனிதவளங்கள் சபையிடம் உள்ள பிராந்திய வேலைத் தளங்கள் சொந்தமாக | ஒரு முன்னோடி செயற்திட்டமாக முகவர் நிறுவனத்திற்கு அனுப்பி முழுமையாக திருத்தம் செய்து ஓடுவதற்கு வழங்குவதற்காக 03 பஸ்கள் நிறுவனத்திற்கு | திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக சபையின் வளங்களை உச்ச அளவாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தும் பாணந்துறை டிப்போவின் NC தொகுதியிலுள்ள 02 பஸ்களும் NB தொகுதியிலுளள ஒரு பஸ்சும் ஆக 03 பஸ்கள் பெறுகை வழிகாட்டிக் கோவையினைப் பின்பற்றாது சபையின் தலைவரின் வாய்மொழி மூல அறிவுறுத்தலின் அடிப்படையில் ஒரு வெளி நிறுவனத்தின் மூலம் ரூபா 15,138,974 தொகைக்கு மீளாய்வாண்டின் போது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | அனுப்பிவைக்கப்பட்டன. | |
| (இ) | பிரதி பொது முகாமையாளரின் (நிதி) சுற்றறிக்கையில் குறிப்பிட்ட சம்பள முற்பணங்கள் செலுத்த வேண்டிய திகதிகளுக்கு முரணாக பதுளை டிப்போவினால் 2024 மே, யூன் மற்றும் யூலை மாதங்களின் போது சபையில் நிரந்தரமாக சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கு ரூபா 6,718,000 முற்பணமும் சபையில் நிரந்தரமாக சம்பளம் பெறாத ஊழியர்களுக்கு ரூபா 1,109,000 சம்பள முற்பணமுமாக மொத்தமாக ரூபா 7,827,000 பணம் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்துவதற்கு பதுளை டிப்போ முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. | ஊழியர்கள் மற்றும் தொழில்சங்க உத்தியோகத்தர்களின் வேண்டுதலின் அடிப்படையில் முன்னாள் உதவி டிப்போ அதிகாரியினால் ஊழியர்களுக்காக இந்த சம்பள முற்பணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. | சம்ப முற்பணங்கள் சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | களுத்துறை, ருகுணு, ஊவா, கம்பஹா, சப்ரகமுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்நத ஆளணியினருக்கு மக்கள் வங்கியினால் விழா முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணங்களுக்குரிய தவணைப் பணமும் வட்டியும் உரிய ஊழியர்களின் சம்பளம் பதியப்படுகின்ற கணக்குகளிலிருந்து அறவிடப்படும். அக்கணக்குகளில் போதியளவு பணம் இல்லாதிருக்கையில் | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வழங்கிய விழா முற்பணங்களுக்குரிய பணமாகும். முறைப்படியாக ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் இடமாற்றம் பெற்ற ஊழியர்களின் பணம் உரிய டிப்போவினால் மேற்கூறிய ஊழியர்களிடமிருந்து அறிவிடப்பட்டுள்ள போதிலும் மேற்கூறிய டிப்போவினால் உரிய டிப்போக்களுக்கு பணம் வழங்கப்படாததனால் இந்த | டிப்போக்களுக்கிடையே இடம்பெறுகின்ற உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் ஒப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் வங்கி நடைமுறைக் கணக்குகளிலிருந்து தலைமை அலுவலகத்தின் அங்கீகாரமின்றி நேரடியாக வரவு வைப்பதற்காக அனுமதி வழங்கப்படாதிருத்த |

| | | |
|---|---|---|
| தவணைப் பணமும் வட்டியும் உரிய டிப்போ கணக்கிலிருந்து அறவீடு செய்வதற்கு தலைமை அலுவலகத்தின் அங்கீகாரமின்றி அந்த டிப்போக்கள் இணங்கியிருந்ததுடன் அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,790,539 சபையின் வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக தலைமை அலுவலகத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதி முன்கொண்டு வரப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் வங்கியினால் தமது பணம் டிப்போ நடைமுறைக் கணக்கிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. | ல் வேண்டும். |

**3.6 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| சாதாரண பஸ்களுக்காக ரூபா 2,850 மில்லியன் தொகைக்கு 285 புதிய இன்ஜின் தொகுதிகளை கொள்வனவு செய்து வாகனத் தொகுதியை வலுப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 502 மில்லியனக்கு 70 இன்ஜின் தொகுதிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே ரூபா 800 மில்லியன் ஒதுக்கீடு செய்து ஓடுவதிலிருந்து அகற்றப்பட்டிருந்த 400 பஸ்களை டிப்போக்களின் மூலம் புனரமைப்புச் செய்து வாகனத் தொகுதிக்குள் இணைத்துக் கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது 90 பஸ்கள் மாத்திரம் ரூபா 120 மில்லியன் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. | பாதீட்டில் அப்பிரேரணைக்காக நிதி ஏற்பாடு கிடைக்காததன் அடிப்படையில் செயற்திட்டம் செயற்படவில்லை. இலங்கை போக்குவரத்து சபையின் நிதி ஏற்பாட்டின் கீழ் 70 இன்ஜின் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு வாகனத் தொகுதியை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவற்றினை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி செயலாற்றல் இலக்கினை அடைந்துகொள்ளுதல் வேண்டும். |

### 3.7 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பதுளை நகரத்திற்கு மத்தியில் சபைக்குச் சொந்தமாக உள்ள கொத்தலாவல வளவின் தந்தை இல்லக் காணியில் 20 பேச்சஸ்களை ஒதுக்கீடு செய்து ஒரு புகை பரிசோதனை நிலையம் ரூபா 9,922,223 கிரயத்தில் 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை புகை பரிசோதனை நிலையத்தின் நடவடிக்கைகளானது நீதிமன்ற தடை உத்தரவின் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்காததனால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | இப்பரீட்சிப்பினை மேற்கொள்ளுகின்ற இரண்டு பிரதான நிறுவனங்களின் மூலம் மூன்றாந் தரப்பினர்களுக்கு இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்தி நீதிமன்றத்தின் மூலம் தடை உத்தரவினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் குழு இல்லாமை டீசல் இருப்பினை மாத்திரம் பரீட்சிக்க கூடியதாக இருத்தல், என்பன செயற்திட்டம் செயற்படாதிருப்பதற்கு காரணி என சுட்டிக்காட்டலாம். | சாத்திய வள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத்து கம்பனியிடம் காணப்பட்ட 20 பஸ்கள் யூலை மற்றும் ஒக்தோபர் சபைக்கு 2023 யூலை மற்றும் ஒக்தோபர் மாதங்களில் பொறுப்பேற்கப்பட்டு அதிசொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவைக்கு வழங்கப்பட்டிருந்தது. உதிரிப் பாகங்கள் இல்லாததன் காரணமாக அவற்றில் 17 பஸ்கள் 2025 மே மாதம் வரை 618 நாட்களும் சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட பஸ்களில் 13 பஸ்கள் 30 நாட்களுக்கும் 1,283 நாட்களுக்கு இடைப்பட்ட கால வீச்சிலும் ஓடுவதிலிருந்து நீக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 07 பஸ்கள் சிறிய திருத்தங்களின் பின்னர் ஓடுவதற்கு இணைத்துக்கொள்ளப்பட்டன. ஏனைய 13 பஸ்கள் திருத்தம் செய்யப்பட்ட உடன் ஓடுவதற்கு இணைத்துக் கொள்வதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி திருத்தம் செய்து பஸ்களை ஓடுவதற்கு இணைத்துக் கொள்ள வேண்டும். |

## 3.8 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) போக்குவரத்துச் சபையின் வாகன தொகுதிக்காக தேவையான டயர்களை மீள் நிரப்புதல் மற்றும் முன் பொருத்துதல்களாக 2017 ஆம் ஆண்டின் பின்னர் பெறுகை மேற்கொள்ளப்படாது 2017 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து தொடர்ச்சியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் விலைத் தளம்பல்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது விலைகளும் திருத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் 04 மாத தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அதன் போது சமர்ப்பிக்கப்பட்ட 17 கேள்வி மனுதாரர்களில் 14 மனுதாரர்கள் நியாயமான கேள்விதாரர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுப் குழுவினால வழங்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்படாது கேள்வி கோருவதற்கு முன்னர் கவனித்துப் பார்க்க வேண்டிய விடயங்கள் மற்றும் காரணிகளை கவனித்துப் பார்ப்பதற்கு உட்பட்டு அங்கீகாரத்தினை வழங்குவதற்கு பிற்போடப்பட்டதன் காரணமாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் டயர்களை மீள்நிரப்புதல் மற்றும் முன்பொருத்துதல்களுக்காக கேள்வி வழங்கப்படவில்லை. மீளாய்வாண்டின் போது 825x20, 900x20 மற்றும் | 04 மாதங்களின் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்காக திருத்திய விலை மனுக்களின் கீழ் இன்னும் டயர்களை மீள்நிரப்புதல் மற்றும் முன்பொருத்துதல்கள் செய்யப்பட வேண்டியிருந்தது. அமைச்சு செயலாளரின் கடிதத்திற்கு இணங்க 10 சதவீதத்தால் விலைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க டயர்களை மீள்நிரப்புதல் மற்றும் மீளப் பொருத்துதல் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1000x20 வகையான 135,311 வகையான டயர்களை டயர்களை மீள் நிரப்புதல் மற்றும் முன்பொருத்துதல்களுக்காக ரூபா 2,295,270,893 செலுத்தப்பட்டிருந்ததுடன் புதிய கேள்விக்காக வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 2,037,911,412 ஆக இருந்ததனால் ரூபா 257,359.481 ஆன புதிய கேள்வி அங்கீகரிக்கப்படாமையின் காரணமாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டத்திற்கு இணங்க ரூபா 65,125 மில்லியன் பெறுமதியான 59 பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 8,967 மில்லியன் பெறுமதியான 16 பெறுகை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டிற்கன பாதீட்டிற்கு உள்ளடக்கப்பட்ட பெறுகைச் செலவுகளில் 13.77 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சராசரி பயிற்சிக் கல்லூரிக்காக 05 மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்யும் பெறுகைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஏனைய பெறுகைகள் 2025 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கு இணங்க பெறுகை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3.9 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 24,886 ஆக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 25,384 ஆகும். அதற்கிணங்க வேலையாட்கள் மட்டத்திலுள்ள பல பதவிகள் தொடர்பாக 498 ஊழியர்களின் மிகையும் சபையின் முகாமைத்துவ மட்டத்திலுள்ள 06 பதவிகள் தொடர்பாக 102 வெற்றிடங்களும் காணப்படுகின்றது என முகாமைத்துவம் தெரிவித்திருந்தும் ஒவ்வொரு பதவிகள் தொடர்பான அங்கீகரித்த, உள்ளபடியான, வெற்றிடமான, மற்றும் மிகையான அளவுகள் தொடர்பாக உறுதியான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆளணியை அங்கீகரித்துள்ளது. 27,592 ஆளணியினரை அங்கீகரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் உரிய சம்பள குறியீட்டிற்கு இன்னும் உள்ளீர்க்கப்படவில்லை. நிரந்தர அடிப்படையில் உள்ளக ரீதியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியாதுள்ளது. | மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான தரவு முறைமையை ஸ்தாபிக்க வேண்டியதுடன் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

.